செ.வெ.எண்:249 நாள்:16.04.2018

**திருநெல்வேலி மணிமூர்த்தீஸ்வரம் அருள்மிகு மூர்த்தி விநாயகர் கோவில் நிலம் தொடர்பான உண்மையில்லாத தகவல்களை நம்பவேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

------------------------

திருநெல்வேலி வட்டம், மணிமூர்த்தீஸ்வரம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மூர்த்தி விநாயகர் கோவில் நிலத்தில் கிறிஸ்தவ கல்லறை தோட்ட காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டு வருவதாக ஊடகங்களில் பரப்பப்பட்டு வரும் தகவல் பொய்யானது ஆகும். பிரஸ்தாப நிலம், நகர அளவை கணக்குகளின்படி திருநெல்வேலி வட்டம், மணிமூர்த்தீஸ்வரம் கிராமம், நகர அளவை வார்டு E பிளாக் 3, நகர புல எண். 14-ல் பரப்பு 7750 சமீ **“சர்க்கார் புறம்போக்கு”** எனத் தாக்கல் ஆகியுள்ளது. மேற்படி சர்க்கார் புறம்போக்கின் ஒரு பகுதியில் அருள்மிகு மூர்த்தி விநாயகர் கோவில் அமைந்துள்ளது. மேற்படி புல எண்ணின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள நகர புல எண். 13/12 பரப்பு 325 ச.மீ ஆனது ஏசுவடியான் மகன் ஜெயராஜ் என்ற பெயரில் பட்டா நிலமாக தாக்கலாகி உள்ளது. மேற்படி பட்டா நிலத்தில் நிலஉரிமையாளர்களால் காம்பவுண்ட் சுவர் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. எனவே மேற்படி கோவில் அமைந்துள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து கல்லறை தோட்டமோ அல்லது காம்பவுண்ட் சுவரோ அமைக்கப்படவில்லை. கட்டப்பட்டுள்ள காம்பவுண்ட் சுவர் பட்டா நிலத்திலே அமைந்துள்ளது என்றும் பொது ஊடகங்களில் பரவி வரும் தகவல்கள் உண்மையில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி